**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருச்சுழி.**

முன்னிலை: திரு.S.வேல்சூர்யா,B.A.,B.L.,

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், திருச்சுழி.

2026 ம் ஆண்டு ஜீன் மாதம் 09 ம் நாள் செவ்வாய்கிழமை.

**Crl.M.P.No.99/2026**

**இன்**

**M.C.No.5/2024**

*****

1) கோடீஸ்வரி (51/2026)
க/பெ.வெற்றிச்செல்வன்
த/பெ.பால்சாமி
க.எண்.130, தெற்கு தெரு,
பண்ணைமூன்றடைப்பு,
பி.தொட்டியான்குளம் அஞ்சல்,
திருச்சுழி வட்டம்,
விருதுநகர் மாவட்டம் – 626129

2) மைனர்.ஜனனி (15/2026)
த/பெ.வெற்றிச்செல்வன்,
க.எண்.130, தெற்கு தெரு,
பண்ணைமூன்றடைப்பு,
திருச்சுழி வட்டம்,
விருதுநகர் மாவட்டம் – 626129

(2 ம் மனுதாரர் மைனர் என்பதால் அவரது தாயாரும்
இயற்கை பாதுகாவலருமான 1 ம் மனுதாரர் மூலம்)

... மனுதாரர்கள்

–எதிர்–

க.வெற்றிச்செல்வன் (55/2026)
த/பெ.கணேசன்,
க.எண்.1/142, தெற்கு தெரு,
பண்ணைமூன்றடைப்பு,
பி.தொட்டியான்குளம் (அஞ்சல்),
திருச்சுழி வட்டம்,
விருதுநகர் மாவட்டம் – 626129 ... எதிர்மனுதாரர்/எதிரி

இம்மனுவானது 07.03.2026ம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.C.வெங்கடேசன்,B.Sc.,B.L., அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/எதிரி தரப்பில் தோன்றாதரப்பினரான நிலையிலும், மனுதாரர்கள் தரப்பு வாதுரைகளைக் கேட்டறிந்தும், மனு மற்றும் அசல் வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையின் கீழ் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

<u>உத்தரவு</u>

1. 1, 2 மனுதாரர்களுக்கு செலுத்த வேண்டிய வாழ்க்கை பொருளுதவி நிலுவைத் தொகை மாதம் ரூ.18,000/- வீதம் 18.04.2024ம் தேதி முதல் 04.11.2025ம் தேதி வரையிலான 20 மாதங்களுக்கான தொகை ரூ.3,60,000/- மற்றும் மனு செலவு தொகை ரூ.10,000/- என ஆக மொத்தம் ரூ.3,70,000/-ஐ எதிர்மனுதாரர் வழங்க கோரியும், தவறும்பட்சத்தில் எதிர்மனுதாரர் பணிபுரியும் இந்திய அஞ்சல் துறையிலிருந்து கிடைக்கக்கூடிய மாத ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்து உத்தரவிட வேண்டியும் BNSS பிரிவு 144-ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>மனுதாரர்கள் தரப்பு மனுவின் சுருக்கம்</u>:-

மனுதாரர்கள் தரப்பில், மனுதாரர் தரப்பில் இந்நீதிமன்றத்தில் கடந்த 18.04.2024ம் தேதி தாக்கல் செய்த மனுவானது M.C.No.5/2024 ஆக கோப்புக்கு எடுக்கப்பட்டு, கடந்த 04.11.2025ம் தேதி தீர்வு பகரப்பட்டது. மேற்படி தீர்ப்பில் 1ம் மனுதாரருக்கு மாதம் ரூ.8000/- வீதமும், 2ம் மனுதாரருக்கு மாதம் தலா ரூ.10000/- வீதமும் அசல் மனு தாக்கல் செய்த தேதியிலிருந்து வழங்க வேண்டும் என்றும், மேலும் இவ்வழக்கின் செலவு

தொகையாக ரூ.10000—த்தை மனுதாரர்களுக்கு, எதிர்மனுதாரர் வழங்க வேண்டும் என்று உத்தரவு பகரப்பட்டுள்ளது. மேற்படி ஜீவனாம்ச தொகையை ஒவ்வொரு ஆங்கில மாதமும் 5—ம் தேதிக்குள் எதிர்மனுதாரர் 1,2 மனுதாரர்களுக்கு கொடுக்க வேண்டும் என்று உத்தரவாகியுள்ளது என்றும், எனவே M.C.No.5/2024—ல் ஏற்பட்ட உத்தரவுப்படி ரூ.3,70,000/— மட்டும் எதிர்மனுதாரர் உடனடியாக செலுத்த உத்தரவிட வேண்டியும், மேற்படி தொகையை எதிர்மனுதாரர், மனுதாரர்களுக்கு செலுத்த தவறும் பட்சத்தில், எதிர்மனுதாரர் பணிபுரியும் இந்திய அஞ்சல் துறையின் மூலம் எதிர்மனுதாரருக்கு கிடைக்கக்கூடிய மாத ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்து 1, 2 மனுதாரர்களுக்கு நேரடியாக கிடைக்கும் வகையில் உத்தரவு பிறப்பிக்க கோரி இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. எதிர்மனுதாரர் தரப்பு மறுப்புரை எதுவும் தாக்கல் செய்யவில்லை.**

4. மனு, அபிடவிட் பரிசீலிக்கப்பட்டது. மனுதாரர் தரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் நன்கு பரிசீலிக்கப்பட்டது.

5. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை என்னவெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

6. இருதரப்பிலும் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. அவ்வாறே சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**7. <u>தீர்வு முடிவு:—</u>**

7(1). மனு, வழக்கு கோப்புகள் பரிசீலிக்கப்பட்டன. மனுதாரர் தரப்பு வாதங்களும் கவனத்தில் கொள்ளப்பட்டன.

7(2). இந்த மனுவானது M.C.No.5/2024–ல் வழக்கில் இந்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவின் அடிப்படையில் மனுதாரர்களால் ஜீவனாம்ச தொகை கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனு ஆவணங்களை பரிசீலனை செய்து பார்க்கையில், இந்த மனுவில் M.C.No.5/2024–ல் எதிர்மனுதாரர், மனு தாக்கல் செய்த தேதியிலிருந்து தனது மனைவியான 1ம் மனுதாரருக்கு மாதம் ரூ.8000/–ம், தன்னுடைய மகளான 2ம் மனுதாரருக்கு மாதம் ரூ.10,000/– ஜீவனாம்சமும் வழங்க வேண்டும் என்றும், மேலும் வழக்கு செலவுத் தொகையாக ரூ.10000/–ம் வழங்கவேண்டும் என்றும் இந்த நீதிமன்றம் 04.11.2025 ம் தேதி உத்தரவு பிறப்பித்துள்ளது. மேற்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டு 6 மாதங்களுக்கு மேல் ஆகியும் எதிர்மனுதாரர் மனுதாரர்களுக்கு மேற்படி தொகையை செலுத்தாமல் இருந்து வருகிறார் என்று மனுதாரர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

7(3).இது தொடர்பாக எதிர்மனுதாரருக்கு இந்நீதிமன்றத்திலிருந்து அறிவிப்பு சார்வு செய்யப்பட்டும், எதிர்மனுதாரர் இந்நீதிமன்றத்தில் ஆஜராகாத காரணத்தினால் அவர் கடந்த 01.04.2026 ம் தேதியிட்ட உத்தரவின்படி தோன்றா தரப்பினராக்கப்பட்டுள்ளார். மேலும் வழக்கு கோப்புகளை பரிசீலனை செய்து பார்க்கும்போது, இந்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவிற்கு எதிராக எதிர்மனுதாரர் மேல்முறையீடு செய்ததாகவோ, தடை உத்தரவு பெற்றதாகவோ ஆவணங்கள் எதுவும் பெறப்படவில்லை. இந்த சூழ்நிலையில் தற்பொழுது மேற்படி உத்தரவின் பேரில் ஜீவனாம்சம் கொடுக்க முடியாது என்று சட்டத்தின் படி எதிர்மனுதாரர் மறுக்க முடியாது.

7(4).மனுதாரர் தரப்பில் M.C.No.5/2024 வழக்கில் எதிர்மனுதாரர் மாதத்திற்கு ரூ.49,535/– சம்பளம் பெறுகிறார் என்றும், அதில் பிடித்தம் போக அவரின்

சம்பளம் ரூ.32,851/− பெறுகிறார் என்று ம.சா.ஆ.10 இந்நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளார். அதன் படி ரூ.32,851/− மாத சம்பளமாக எதிர்மனுதாரர் பெற்று வருகிறார்.

7(5). 1, 2 மனுதாரர்களுக்கு 18.04.2024 ம் தேதி முதல் 04.11.2025 ம் தேதி வரை மாதம் ரூ.18,000/− ஜீவனாம்சம் நிலுவை தொகை மற்றும் வழக்கு செலவுத்தொகை ரூ.10,000/− ஆக மொத்தம் ரூ.3,70,000/− எதிர்மனுதாரர் செலுத்தவில்லை என்று தவறுதலாக கணக்கிட்டு தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் M.C.No.5/2024 மனு தாக்கல் செய்த தேதியான 18.04.2024 ம் தேதி முதல் 04.11.2025 ம் தேதி வரையிலான காலத்தை **18 மாதம், 16 நாட்கள்** என கணக்கிட்டு, ஒரு மாதத்திற்கு ரூ.18,000/− வீதம் 1, 2 மனுதாரர்களுக்கு எதிர்மனுதாரர் செலுத்த வேண்டிய தொகை **(18 மாதங்களுக்கு ரூ.3,24,000 மற்றும் 16 நாட்களுக்கு ரூ.9600/− மற்றும் வழக்கு செலவுத்தொகை ரூ.10,000 ஆக மொத்தமாக ரூ.343600/−)** மொத்தம் ரூ.343600/− என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

7(6).எனவே இந்நீதிமன்றம் M.C.No.5/2024 மனுவில் வழங்கிய உத்தரவை மதிக்காமல் ஜீவனாம்ச தொகையை வழங்காமல் எதிர்மனுதாரர் இருந்து வருவதால், **இந்நீதிமன்றம் எதிர்மனுதாரர் அஞ்சல் எழுத்தராக பணிபுரிந்து பெறும் சம்பளத்தில் ரூ.10,000−த்தினை கட்டாய பிடித்தம் செய்து, அதனை மனுதாரர்களுக்கு வழங்க உத்தரவிடுவது நீதியின்பால் சரியாக இருக்கும் என்று முடிவு செய்துகிறது.**

7(7).இந்நீதிமன்றம் எதிர்மனுதாரர் வேலை பார்க்கும் அலுவலகத்தின் சம்பளம் வழங்கும் அதிகாரியான, தலைமை தபால் அதிகாரி, கிழக்கு அஞ்சல்

அலுவலகம், அருப்புக்கோட்டை அவர்களுக்கு எதிர்மனுதாரரான க.வெற்றிச்செல்வன், த/பெ.கணேசன், க.எண்.1–142, பண்ணைமூன்றடைப்பு, பி.தொட்டியாங்குளம் அஞ்சல், திருச்சுழி தாலுகா, விருதுநகர் மாவட்டம் (பதவி: அஞ்சல் எழுத்தர், ஊதியம் செலுத்தப்படும் அருப்புக்கோட்டை அஞ்சலக சேமிப்பு எண்.2423503571) என்பவரின் மாத சம்பளத்தில் இருந்து மாதம் ரூ.10,000/– கட்டாய பிடித்தம் செய்து, அதனை ஒவ்வொரு மாதத்திலும் 5ம் தேதிக்குள் 1, 2 மனுதாரர்களின் வங்கி கணக்கிற்கு அனுப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும் என உத்தரவிடுகிறது. மேலும் எதிர்மனுதாரர் தனது விருப்பத்தின் பேரில் வேறு எந்த கட்டாய பிடித்தம் இருந்தாலும் ஜீவனாம்சம் கட்டாய பிடித்தம் செய்ய இயலாது என தெரிவிக்க முடியாது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**8. முடிவாக,**

**I)** 1, 2 மனுதாரர்களுக்கு எதிர்மனுதாரர் ஜீவனாம்ச தொகையாக (18.04.2024ம் தேதி முதல் 04.11.2025ம் தேதி வரையிலான காலத்திற்கு (**18 மாதம், 16 நாட்கள்)** மொத்தம் **ரூ.343600/–ஐ** கொடுக்க வேண்டும் என்று இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

**Ii)** மேற்படி தொகையை எதிர்மனுதாரர் செலுத்த தவறியதால் எதிர்மனுதாரருக்கு சம்பளம் வழங்கும் அலுவலரான தலைமை தபால் அதிகாரி, கிழக்கு அஞ்சல் அலுவலகம், அருப்புக்கோட்டை அவர்கள் எதிர்மனுதாரரான **க.வெற்றிச்செல்வன், த/பெ.கணேசன், க.எண்.1–142, பண்ணைமூன்றடைப்பு, பி.தொட்டியாங்குளம் அஞ்சல், திருச்சுழி தாலுகா, விருதுநகர் மாவட்டம் (பதவி: அஞ்சல் எழுத்தர், ஊதியம் செலுத்தப்படும் அருப்புக்கோட்டை அஞ்சலக சேமிப்பு எண்.2423503571)** என்பவரின் சம்பளத்திலிருந்து

மனுதாரர்களுக்கான ஜீவனாம்ச தொகையான ரூ.343600/-ஐ அவர்கள் பெறும் விதமாக மாதம் **ரூ.10000/-ஐ** பிடித்தம் செய்து மனுதாரர்களின் வங்கி கணக்கிற்கு (பண்ணைமூன்றடைப்பு கனரா வங்கி, Account No.192510100l593, IFSC code: CNRB0001925, MICR code: 625015031) தவறாது ஒவ்வொரு மாதமும் 5ம் தேதிக்குள் அனுப்ப இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

**Iii**) இந்த உத்தரவின் நகல் தலைமை தபால் அதிகாரி, கிழக்கு அஞ்சல் அலுவலகம், அருப்புக்கோட்டை அவர்களுக்கு ஜீவனாம்சம் பிடித்தம் செய்வதற்காக அனுப்பி வைக்க உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சரிடம் நேரடியாக சொல்லப்பட்டு, கணிணியில் தட்டச்சு செய்து, பின்னர் என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு **2026-ஆம் ஆண்டு ஜீன் 09ம்** நாளான இன்று இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ஓம்/-S.வேல்சூர்யா (09.06.2026)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.

தலைமை தபால் அதிகாரி அவர்கள்,
கிழக்கு அஞ்சல் அலுவலகம்,
அருப்புக்கோட்டை.

| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| திரு.S.வேல்சூர்யா,B.A.,B.L., | தலைமை தபால் அதிகாரி அவர்கள், |
| மாவட்ட உரிமையியல் மற்றும் | கிழக்கு அஞ்சல் அலுவலகம், |
| நீதித்துறை நடுவர், | அருப்புக்கோட்டை. |
| திருச்சுழி. | |

-----------------------------------------------------------